## சங்கீதம் 46

### சேனைகளின் கர்த்தர் நம்முடன் இருக்கிறார்

1 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

2 ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்,

3 அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா.)

4 ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.

5 தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம்பண்ணுவார்.

6 ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று.

7 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா.)

8 பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.

9 அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.

10 நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

11 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா.)

அறிமுகம்:

இந்த சங்கீதமானது, தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவையான நம்பிக்கையும், மிக முக்கியமாக தைரியத்தையும் தருகிறது. ஒரு கிறிஸ்தவராக இந்த பூமியில் வாழ்வது என்பது எளிதானது அல்ல! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒரு கிறிஸ்தவராக இந்த சங்கீதத்தை படிப்பதன் மூலமாய் இந்த சங்கீதமானது, நம்முடையதைரியத்தையும், தன்நம்பிக்கையையும் தூண்ட கூடியதாக இருக்கிறது. **இந்த சங்கீதம் 46 இந்த நிலையில்லாத மற்றும் நிச்சயம் இல்லாத உலகத்தில் தேவன் மாத்திரமே நமக்கு நிலையான பாதுகாப்பு என்பதை காண்பிக்கிறது.** சூழ்நிலைகள் மாறும் போது, மனிதர்கள் மாறும் போது, நம்முடைய எல்லா திட்டங்களும் வீணாகும் போது, பயமானது நம்மை வேதனைப்படுத்தும் போது, இந்த சங்கீதமானது நமக்கு கூறுகிற செய்தி எல்லா தேவனுடைய கட்டுப்பாட்டுங்கள் தான் இருக்கிறது. நீங்கள் பாதுகாப்பாக இல்லை என்பதையோ, அல்லது உங்களுக்கு ஆபத்து நேரிடவுள்ளதாக நீங்கள் நினைக்கும் போது இந்த சங்கீதம் உங்களுக்கு ஞாபகப்படுத்தும் விஷயம் தேவன் உங்களுடன் தான் இருக்கிறார். (சங்கீதம் 46:7).

இந்த சங்கீதமானது, எசேக்கியா இராஜா யூதாவை ஆண்டுக்கொண்டிருக்கும் போது, அசீரியர்களின் படையெடுப்பினால் யூதா முழுவதும் பயந்துக்கொண்டிருந்த போது, தேவன் அவர்களை பாதுகாத்து, தேவன் அசிரியர்களை விரட்டிவிட்டதற்கு பின்பு பாடப்பட்டதாக நம்பப்படுகிறது. ( 2 நாளா 32). இந்த சங்கீதமானது நாம் வாழ்க்கிற கடினமான வாழ்க்கைக்கு நமக்கு மிகவும் தேவையானதாக இருக்கிறது. இந்த சங்கீதமானது நம்முடைய நம்பிக்கைக்கு இன்னும் அதிகமான பலம் சேர்க்க கூடியதாக இருக்கிறது.

A. **“தேவன் நமக்கு” (வ1) –** இந்த சங்கீதமானது, தொடங்கும் போதே தேவன் அவர்களுடைய பிள்ளைகளுக்கு என்னவாக இருக்கிறார் என்பதிலிருந்து தொடங்குகிறது.

   i. அடைக்கலம் – refuge, பாதுகாப்பான தங்கும் இடம்.
   ii. பெலன் – Strength, வலிமை, பலம்
   iii. அநுகூலமான துணையுமானவர் – நன்மை, சாதகம், உதவி மற்றும் வெற்றி

யூதா என்கிற சிறிய நாட்டிற்கு விரோதமாய், மிகப்பெரிய பேராரசாக இருக்கிற அசிரியா வரும் போது, எசேக்கியா எந்த ஒரு மனிதனின் தயவையும் தேடிப்போகவில்லை. தன்னுடைய மேலான நிலையில் இருக்கிற எகிப்து, பாபிலோன் போன்ற இராஜ்யங்களை தேடிப்போகவில்லை. மாறாக அவன் தேவன் மீது தன்னுடைய நம்பிக்கை வைத்தது மாத்திரமில்லாமல் தன்னுடைய ஜனங்களை தேவன் மீது நம்பிக்கை வைத்திருக்கும் படி உற்சாகப்படுத்தினான். (2 நாளா 32:7,8)

“நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும்

கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்.

அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே என்று சொல்லி, அவர்களைத் தேற்றினான்; யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சொன்ன இந்த வார்த்தைகளின்மேல் ஜனங்கள் நம்பிக்கை வைத்தார்கள்" . - (2 நாளா 32:7,8)

நம்முடைய வாழ்க்கையில் ஆபத்து வரும் போது நாம் எங்கே? யாரிடம்? போய் இருக்கின்றோம். பிலிப்பியர் 4:6; 1 பேதுரு 5:7

B. **"ஆகையால்" (வ 2,3) –** தேவன் அவர்களுடைய பிள்ளைகளுக்கு எப்படிப்பட்டவராய் இருக்கிறார், என்பதை அறிந்துக்கொண்டதற்கு பின்பு. "நாம் பயப்படோம்" என்பதை சங்கீங்காரன் இங்கு கூறுகிறார்.

i. பூமி நிலைமாறினாலும் (வ 2)
ii. மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும் (வ 3)
iii. ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி (வ 3)
iv. பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் ( வ 3)

நாங்கள் பயப்படுவதில்லை என சங்கீதங்காரன் பாடுகிறார். எப்படி? தேவன் நமக்கு உதவி செய்பவர். வேதாகமத்தில் ஏறக்குறை 365 முறைகள் பயப்பட வேண்டாம்! நான் உன்னுடன் இருக்கிறேன் என கூறியிருக்கிறது. எங்கேயெல்லாம் பயப்படவேண்டாம் என கூறியிருக்கிறதோ, அங்கே எல்லாம் நான் உன்னுடன் இருக்கிறேன் என்கிற உறுதியை தேவன் கொடுத்திருக்கிறார். ( ஆதி 15:1; உபா 31:6; எசா 41:10; லூக் 2:10; எபி 13:5,6). பயமானது மிகவும் மோசமான காரியம் அந்த பயத்தை போக்க தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம் தான் இது. "நான் உன்னுடன் இருக்கிறேன்". அப் 18:9,10.

C. **"தேவன் அதற்கு சகாயம் பண்ணுவார்" ( வ 4 – 6) –** இந்த வசனப்பகுதியின் ஆரம்பத்தில், இங்கு நதியைப்பற்றி கூறியிருக்கிறது. அந்த நதி தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்ப்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும் என கூறியிருக்கிறது. இந்த இடத்தில் சொல்லப்பட்ட நதி என்பது நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள முடியாது. பொதுவாக நதி என்பது தேவனுடைய ஆவியை அடையாளப்படுத்துவதற்காக பயன்படும்.(யோவான் 7:37-39). இந்த நதி தேவன் வாசம்பண்ணுகிற இடத்தை சந்தோஷிப்பிக்கும் என கூறப்பட்டிருக்கிறது, புதிய ஏற்பாட்டின் காலத்தில் நாமே தேவன் வாசம்பண்ணும் இடமாக இருக்கிறோம். (1 கொரி 3:16,17) தேவனுடைய ஆவி நம்மை சந்தோஷப்படுத்துகிறதாக இருக்கிறது. (ரோமர் 14:17). ஜாதிகள் கொந்தளித்தாலும், ராஜ்யங்கள் தத்தளித்தாலும், தேவன் மேலும், அவருடைய வாரத்தையின் மீதும் நம்பிக்கைவுள்ளவர்கள் இருதயம் சந்தோஷிப்பிக்கப்படுகிறது. தேவன் நமக்கு உதவி செய்கிறார். (எபி 13:5,6)

D. **“சேனைகளின் கர்த்தர் நம்முடன் இருக்கிறார்” (வ 7- 11):** புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைபற்றி கூறும் போது, வெளிப்படுத்தல் வெளி 17:14 –யில் கூறும் போது, “அவர் ராஜாதி ராஜாவாக இருக்கிறார் என கூறியிருக்கிறது. வெளி 1:5 -யில் இயேசு கிறிஸ்து “பூமியின் இராஜாக்களுக்கு அதிபதி” என கூறியிருக்கிறது, நம்முடைய பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் சாதாரணமானவர் இல்லை. எல்லா அதிகாரத்திற்கு மேலானவர்கள். அந்த தேவன் நம்முடன் இருக்கிறார் என்பது நம்முடைய இருதயத்தை சந்தோஷப்படுத்துவதோடு நம்மை தைரியப்படுத்துகிறதாக இருக்கிறது.

E. **“நீங்கள் அமர்ந்திருந்து’ (வ 10) –** அசீரியாவின் ராஜாவான சனகெரிப் எசேக்கியாவையும், யூதா ஜனங்களை தன்னுடைய பலத்தை காண்பித்து அவர்களை பயப்படுத்தி கொண்டு இருக்கும் போது, யூதா ஜனங்கள் தேவன் நம்பிக்கை வைத்து, அவருடைய பதிற்செய்கைக்கு இடம் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். யூதாவை சூழ்ந்திருந்த அசீரிய படைக்குள் தேவன் தேவ தூதனைஅனுப்பி அசீரிய படைப்பயை அழிந்ததின் மூலமாய், சனகெரிப் செத்த முகத்துடன் சென்றான். ( 2 நாளா 32:15-22). இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? அமர்ந்திருங்கள் என்பது, பொறுமையிருந்து, தேவனுக்கு இடங்கொடுங்கள். நாம் ஜெபம் செய்யவேண்டும், தேவன் மீது நம்பிக்கையாயிருக்க வேண்டும், தேவனுடைய செயல்கள் மூலமாய் அவருடைய செயல்கள் மூலமாய் அறிந்துக்கொள்ள வேண்டும்.

F. **“அறிந்துக்கொள்ளுங்கள்”(வ 10) –** நம்முடைய வாழ்க்கையில் தேவனை அறிந்துக்கொள்வது என்பது மிகவும் முக்கியமானது, யோவான் 17:17 -யில் தேவனை அறிவதே நித்திய ஜீவன் என படிக்கிறோம். தேவனையும், அவருடைய வார்த்தையும் அறிவது நம்முடைய வாழ்க்கைக்கு வல்லமை சேர்ப்பதோடு, நம்மை தேவனைப்பிரியப்படுத்த செய்யும். தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை அறிந்துக்கொள்வதன் மூலமாய், நாம் நம்முடைய வாழ்க்கையில் ஆபத்தான காலத்தில் தைரியமாய் அவற்றை எதிர்க்கொண்டு நம்மாலும் இப்படியாக கூற முடியும்.

**“சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.”**

A. நாம் எல்லாருங்கும் பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டும். எபேசியர் 1:17-19

17 **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,**

தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை
18 இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற
சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;

தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த
தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய
நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான
19 மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப்
பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும்
வேண்டிக்கொள்ளுகிறேன்.